விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 30 வெள்ளிக்கிழமை (15.09.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 261

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## கூட்டமைப்பு எம்.பிக்கள் ஞாயிறன்று இந்தியப் பிரதமரை சந்தித்துப்பேச்சு

### அழைப்புக் கடிதம் அனுப்பி வைப்பு

(சென்னை)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நாளை மறுதினம் சந்திக்கவுள்ளனர்.

சந்திப்புக்கான அழைப்புக்கடிதம் இந்தியப் பிரதமரின் அலுவலகத்தினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத்தலைவர் இரா.சம்பந்தனுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.சென்னையில் தற்போது தங்கியிருக்கும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, (04 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் தாக்குதலில் நாகர்கோயிலில் இரு சிப்பாய் பலி

(யாழ்ப்பாணம்)

நாகர்கோயில் பகுதியில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினமிரவு 12.05 மணியளவில் கால்நடையாக ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தின் மீது விடுதலைப்புலிகள் சிறுதாக்குதலை மேற்கொண்டனர். இதில் இருவர் மரணமாகினர்.

இதனையடுத்து இராணுவத்தினரும் சிறு தாக்குதலை மேற்கொண்டதாக தேசிய பாதுகாப்பு தகவல் மையம் தெரிவித்துள்ளது. இச் சம்பவத்தில்சிப்பாய் (04 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த நிறுத்தத்தை மதித்து நடக்க அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்!

## சர்வதேச சமூகத்திடம் தமிழ்ச்செல்வன் கோரிக்கை

(கிளிநொச்சி)

**2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் உருவாக்கப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தையும் அதன் அடிப்படையிலான ஜெனிவா இணக்கப்பாடுகளையும் அரசாங்கம் மதித்து நடக்கவேண்டுமென இணைத்தலைமை நாடுகள் கோரியுள்ளதை விடுதலைப்புலிகள் வரவேற்றுள்ளனர்.**

**மகிந்த ராஜபக்ஷ அரசு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் விதிகளின் அடிப்படையில் பேச்சுக்களை நடத்துவதற்கு ஏதுவான சூழலை உருவாக்குவதற்கும் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கும் என தாம் நம்புவதாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறினார்.**

*(04 ஆம் பக்கம் பார்க்க)*

## எந்த சூழ்நிலையிலிருந்தாலும் அரசு பேச்சிலிருந்து விலகாது

### நோர்வேயிடம் அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

அரச சமாதானக் குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான குழுவினரை இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிறஸ்ட்ஸ்கர் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இச் சந்திப்பு நோர்வே தூதரகத்தில் நடைபெற்றது. இது குறித்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளதாவது;

அரச சமாதான செயலகத்தினால் விடப்பட்டுள்ள அறிக்கையில் அரசின் நிலைப்பாடு தெளிவாகக்குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது பேச்சுவார்த்தை நடக்கும் திகதி, இடம் குறித்து அரசுடன் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி.உறுப்பினர் நேற்று வவுனியாவில் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா குருமன்காட்டுப் பகுதியில் ஈ.பி.டி.பியின் உறுப்பினர் ஒருவர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

தினமுரசுப் பத்திரிகை விற்பனையில் ஈடுபட்டிருந்த இருவர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் மற்றொருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் இடம்பெற்றவுடன் இருவரையும் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது ஒருவர் உயிரிழந் (04 ஆம் பக்கம் பார்க்க)

## அல்வாய் மாலுசந்தியில் இளைஞன் சுட்டுக்கொலை

(பருத்தித்துறை)

அல்வாய் மாலுசந்திப் பகுதியில் நேற்றுக் காலை 8.15 மணியளவில் இளைஞன் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.கட்டைவேலி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில் ஆட்டோச்சாரதியாக பணிபுரியும் அல்வாயைச் சேர்ந்த சச்சிதானந்தம் சசிதரன் (வயது 25) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## மண்கும்பானில் இரு சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி மண்கும்பான் பிள்ளையார் கோயிலடியில் சூட்டுக்காயங்களுடன் இரண்டு ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் இவை இனங்காணப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## இரவு நேர மின்சாரம் 7 மணிமுதல் 8.30 வரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இரவு நேரங்களில் ஒன்றரை மணி நேர மின்சாரமே வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இரவு 7 மணிமுதல் இரவு 8.30 மணிவரையும் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டினையடுத்து மின்சாரம் வழங்குவதில் (04 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகளுடன் சென்ற கப்பல் திருகோணமலை சென்றது

(திருகோணமலை)

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து நேற்று அதிகாலை புறப்பட்டுச் சென்ற பயணிகள் கப்பல் நேற்று மாலை திருகோணமலையை சென்றடைந்தது.

650 பயணிகளுடன் சென்ற இக் கப்பலில் வெளிநாட்டுக்குடியுரிமையுடையவர்கள் மாணவர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் பயணம் செய்தனர்.

இக் கப்பலில் யாழ்.மாவட்டத்தில் தேங்கிக் கிடந்த தபால் பொதிகளும் எடுத்துச்செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று சிங்கள இளைஞர்கள் உட்பட 4 பேர் வவுனியாவில் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியாவில் இடம் பெற்ற வெவ்வேறு சம்பவங்களில் மூன்று சிங்கள இளைஞர்கள் உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மதகு வைத்தகுளம் பகுதியில் கைகள், முகம் என்பன கட்டப்பட்ட நிலையில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் மூன்று சிங்கள இளைஞர்களின் சடலம் மீட்கப்பட்டது.

இவர்கள் கூமாங்குளத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படும் சுகாதார நிலையத்தின் கட்டட வேலையில் ஈடுபட்டிருந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச துறையில் பணியாற்றுபவர்களுக்கு இரட்டை மொழி அறிவு அவசியமானது

## அமைச்சர் டி.யு.குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

அரச் துறையில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுக்கு இரட்டை மொழி அறிவை பெற்றிருக்க வேண்டும் என்ற கொள்கை கட்டாயமாக அமுல்படுத்தப்பட வேண்டும் என அரசியல்துறை விவகார அமைச்சர் டி.யு. குணசேகர தெரிவித்துள்ளார்.

அரசதுறையில் பணியாற்றும் சிங்களவர்களுக்குத் தமிழ் மொழி அறிவூட்டும் தேசியத் திட்டத்தின் முதல் நிகழ்வு நேற்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

1978 ஆம் ஆண்டு தேசிய மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்ட தமிழ் மொழி 1987 ஆம் ஆண்டு நிர்வாக மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

எனினும் இதுவரை அது செயற்படுத்தப் படவில்லை. தேசிய இனப்பிரச்சினைக்கு மொழியாக்கம் இல்லாமையே முக்கிய அடிப்படைக் காரணி என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

1833 ஆம் ஆண்டு ஆங்கில மொழி நிர்வாக மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அதன்பின் 123 வருடங்களாக 10 வீதத்திற்கும் குறைந்த தொகையினரே பயன்பெற முடிந்தது. பின்னர் 1956 ஆம் ஆண்டு சிங்கள மொழி மாத்திரமே என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது.

இதனால் தமிழ் மக்கள் பாரிய பாதிப்புக்களுக்குள்ளானார்கள். இந்நிலையில் அரச துறையில் மொழிப் பிரச்சினை தொடருமானால் இன்னும் பத்து வருடங்களில் வடக்குக் கிழக்குப் போன்ற ஒரு நிலைமை மலையகத்திலும் ஏற்படலாம் என அவர் அச்சம் வெளியிட்டார்.

இதனைத் தான் அமைச்சரவையில் தெரிவித்ததையடுத்தே இரண்டாம் மொழி கட்டாயம் தொடர்பான கொள்கைக்கு அமைச்சரவை அனுமதித்ததாக அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் சுமார் 2 லட்சம் பேர் அரச துறையில் பணியாற்றுவர் என எதிர்பார்க்கப் படுகின்றது. இவர்களில் மூன்று லட்சம் பேர்கள் அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளில் இரண்டாம் மொழிப் போதனையை மேற்கொள்ள முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

வடக்குக் கிழக்கு உட்பட ஏனைய மாகாணசபைகளில் 15 வீதமானோர் தமிழ் மொழியில்பணியாற்றுபவர்களாகவுள்ளனர். நாட்டின் மொத்த சனத்தொகையில் 61 வீதமான தமிழ் மொழி பேசும் மக்கள் வடக்குக் கிழக்குக்கு வெளியே வாழ்கின்றனர். இதில் 51 வீதமான தமிழர்கள் வட-கிழக்கிற்கு வெளியே சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர்.

நாட்டிலுள்ள 300 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் 59இல் 2.5 வீதம் மாத்திரமே தமிழ் மொழி அமுலாக்கல் செயற்படுத்தப் படுகிறது.

29 உதவி அரசாங்க பிரிவுகளில் 20 வீதமானோர் தமிழ் மொழியில் பணியாற்றுபவர்களாகவுள்ளனர் எனக் கூறினார். (ச)

# பொருட்களைப் பெற வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையிலிருந்து காங்கேசன் துறைமுகத்திற்கு வந்த றுகுணு கப்பலில் உணவுப் பொருட்கள் கூட்டுறவுச் சங்கங்களூடாக வழங்கப்படவுள்ளது.

இவ்வார இறுதிக்குள் பகிர்ந்தளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. அதற்கிடையில் ஏற்கனவே பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்பட்ட பொருட்களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் அவற்றை உடனடியாகப் பெற்றுக் கொள்ளுமாறு கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(ச-133)

# அடிப்படைச் சிங்கள மொழிப் பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் அரசாங்க அலுவலர்களுக்கு யா/ வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றுவந்த அடிப்படைச் சிங்கள மொழிப் பயிற்சி வகுப்புக்கள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு வழமைபோல் நடைபெறும் என யாழ்.பிராந்திய ஆணையாளர் அறிவித்துள்ளார். (ச)

# பாணின் விலை 30 ரூபா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இன்றிலிருந்து 450 கிராம் பாணின் விலை 30 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையிலிருந்து கப்பல் மூலம் பெறப்பட்ட, பாண்தயாரிப்புக்கான பிறிமா மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் பாணின் விலையை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இதேவேளை ஏற்கனவே பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்ட மாவின் அளவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

1-2 அங்கத்தவர் உள்ள குடும்பத்திற்கு 2 கிலோவும், 3-5 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 3 கிலோவுமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மா கிலோ 40 ரூபா வீதம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ச)

# வெளிமாவட்ட கல்வியாளர்களுக்கு நாளை சம்பள முற்பண கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு உட்பட்ட மடு, வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, மன்னார் ஆகிய நான்கு வலயங்களிலுமுள்ள பாடசாலைகளில் பணியாற்றிய, யாழ்ப்பாணம் திரும்பிச் செல்ல முடியாத நிலையில் உள்ள கல்விசார் பணியாளர்களுக்கான செப்ரெம்பர் மாதத்திற்குரிய சம்பள முற்பணமாக 10 ஆயிரம் ரூபா நாளை சனிக்கிழமை காலை யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளின் கல்வி சார் ஊழியர்களது பட்டியல் அரச சார்பற்ற நிறு வனங்கள் மூலம் அவ்வப்பகுதி கல்வி வலயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அப்பட்டியல் ஊர்ஜிதம் செய்யப்பட்டுத் திரும்பக் கிடைத்ததும் அவர்களுக்கான முற்பணம் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த யாழ்.நகரில் தங்கியுள்ள கல்விசார் பணியாளர்களது பட்டியல் அவ்வப் பகுதி கல்வி வலயங்களுக்கு பக்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து பதில் கிடைத்ததும் அவர்களுக்கான சம்பள முற்பணம் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சம்பள முற்பணம் வழங்குவது தொடர்பாக நேற்று அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-133)

# அத்தியாவசியப் பொருட்களுடன் யாழ். நோக்கி கப்பல் பயணம்

(திருகோணமலை)

யாழ்ப்பாணத்துக்கான அத்தியாவசியப் பொருட்களைஏற்றிக் கொண்டு மற்றொரு உணவுக் கப்பல்இன்று காங்கேசன்துறைக்கு வருகிறது.

நேற்று இக் கப்பலில் முழு அளவில் பொருட்கள் ஏற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பொருட்கள் ஏற்றும் பணிகள் நிறைவுற்றதும் அக் கப்பல் இன்று திருகோணமலையிலிருந்து புறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச)

# பெயர்ப் பட்டியலை காண்பிக்குமாறு கோரி கப்பல் பயணிகள் செயலகத்தில் முற்றுகை

(யாழ்ப்பாணம்)

கப்பல் மூலம் திருகோணமலைக்குச் செல்வதற்குப் பதிவுகளை மேற்கொண்டிருந்த மக்கள் தமது விபரங்களை உறுதிப்படு த்துமாறு கோரி யாழ்.செயலகத்தை நேற்று முற்றுகையிட்டனர்.

திருகோணமலைக்கான பதிவுகளைத் தாம் ஆரம்பத்தில் மேற்கொண்டபோதிலும் தமக்குப் பயண அனுமதி வழங்கப்படாத நிலையில், பின்னர் பதிவு செய்தவர்களுக்கே பயண அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

நேற்றுக் காலை யாழ்.செயலகத்தில் ஒன்று கூடிய ம்க்கள் தமது பட்டியலைக் காண்பிக்குமாறு கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து உரியவர்களினால் பெயர்ப் பட்டியல் காண்பிக்கப்பட்டதையடுத்தே அவர்கள் செயலகத்திலிருந்து சென்றனர். (ச-133)

# இடம்பெயர்ந்தவர்களுக்கென பிரிட்டன் ஒருமில்லியன் நிதியுதவி

இலங்கையில் வன்முறைகளால் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கு என பிரிட்டன் மேலதிகமாக ஒரு மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

பிரிட்டனின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் கரெத் தோமஸ் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

இலங்கையில் வன்முறைகள் அதிகரித்துள்ளதால் சமீபத்தில்இடம்பெயர்ந்தவர்களுக்கென பிரிட்டன் மேலதிக நிதியுதவியை வழங்குகின்றது. பாதுகாப்புக் காரணங்களுக்காக தமது இருப்பிடங்களிலிருந்து வெளியேறிய 2 லட்சத்து 50 ஆயிரம் பேரின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும்.

இடம்பெயர்ந்தவர்கள் வன்முறைகள், எவ்வித அச்சுறுத்தல்களும் இன்றி தமது பகுதிகளுக்குத் திரும்புவதற்காக மோதல்கள் உடனடியாக நிறுத்தப்படுவது அவசியம்.

இடம்பெயர்ந்த மக்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்கு உதவிகள் சென்றடைவதற்கான அனுமதியை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் வழங்க வேண்டும்.

அடிப்படை மனித உரிமைகள் மதிக்கப்படுவது மிக முக்கியமானது 20 வருட மோதல்களுக்குப் பின்னர் இலங்கை மக்கள் சமாதானத்தை எதிர்பார்க்கின்றனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் மோதல்கள் நிறுத்தப்பட்டு ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டால் மாத்திரமே இது சாத்தியமாகும் என அவர் கூறினார். (ச-5)

# கப்பல் பயணத்திற்கு யாரிடம் பதிவு செய்வது

## ம.உ.குழுவிடம் மக்கள் கேள்வி

வெளிமாவட்டங்களைச் சேர்ந்த தமது பயணம் தொடர்பில் ஏற்பட்டுள்ள் தடங்கல் மற்றும் பயணம் தொடர்பாக யாருடன் தொடர்பு கொள்வது என்பது குறித்து தெரியப்படுத்துமாறு மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

அம் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குடும்பங்களைப் பிரிந்து பல்வேறு துன்பங்களில் நாம் உள்ளோம். உடனடியாக எமது இடங்களுக்குச் செல்ல கப்பல் வசதி பெற யாருடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று குழப்ப நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

மாவட்ட செயலகத்தில் எமது கப்பல் பயணம் தொடர்பாக கேட்டும்போது அங்கு சிவில் அலுவலகம் சென்று கேட்குமாறு பதிலளிக்கிறார்கள்.

ஆனால் சிவில் அலுவலகம் சென்று கேட்கும்போது மாவட்ட செயலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு அவர்கள் கூறுகிறார்கள். செயலகம் சென்றால் அங்கு முதல் கூறியதையே மீண்டும் தெரிவிக்கின்றனர்.

இதனால் நாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளோம். இது குறித்து உரிய பதிலை தருமாறு வேண்டுகிறோம்என அவர்களின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# திருகோணமலையில் அரச ஊழியர் சுட்டுக் கொலை

திருகோணமலை மாவட்டச் செயலகத்தின் புனர்வாழ்வுத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.சுட்டுக் கொல்லப்பட்டவர் அருணாசலம் சற்குணராஜா(வயது-30) எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.நேற்று முற்பகல் 11.15 மணியளவில் முத்தைவெளிப் பகுதியில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இது தொடர்பான விசாரணைகளை திருமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# சி.சு.கவுடன் இணைவது குறித்து இன்று முக்கிய கலந்துரையாடல்

(கொழும்பு)

பிரதான பொது உடன்பாடு ஒன்றின் அடிப்படையில் அரசுடன் இணைந்து செயற்படுவது குறித்து ஆராய்வதெற்கென நியமிக்கப்பட்ட குழு இன்று கூடுகிறது.

ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூர்யாவையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறி சேனாவையும் இணைத் தலைவர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட குழுவே இன்று கூடுகிறது.

இக் கூட்டத்தின் போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஐக்கிய தேசியக் கட்சி இணைந்து செயற்படுவது குறித்து தீர்மானங்கள் முன்வைக்கப்படவுள்ளதாக தெரிய வருகின்றது. (ச)

# மாவிலாற்றில் ஷெல் தாக்குதல்

மாவிலாற்றில் இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட எறிகணை தாக்குதலில் இராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.மாவிலாற்றிலுள்ள இராணுவத்தினர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிமீது தாக்குதல் நடத்தியபோது புலிகள் பதில் தாக்குதல் நடத்தியதிலேயே ஒருவர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பறிவு, அற்றவர்களையோ, மெத்தப்படித்தவர்களையோ, உண்மையை அறிய முடியாதவர்களையோ ஆளும் அதிகாரிகளாக ஆக்கக் கூடாது.

-பிளேட்டோ

வலம்புரி

## நிறைவேற்று அதிகாரம் மகிந்தவிடமா? ரம்புக்வெலவிடமா?

சமாதானப் பேச்சுவார்த்தை அடுத்த மாதம் முற்பகுதியில் நடைபெறும் என இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் அறிவிக்க,

நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு அரசும் விடுதலைப்புலிகளும் தயாரென, எரிக்சொல் ஹெய்ம் கூற அட! இனிமேல் கப்பல் வந்தால் என்ன? விட்டால் என்ன? என்ற மனநிலையில் மக்கள் நிம்மதி அடைந்தனர்.

அந்த நிம்மதி அமைச்சர் ரம்புக்வெலவுக்கு திருப்தியளிக்கவில்லைபோலும்,

நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு அரசு தயார் என்று எரிசொல்லிடம் நாம் கூறவில்லை என ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அதேநேரம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அரசு நிபந்தனை விதிக்கவில்லை என சமாதானச் செயலகப் பணிப்பாளர் பாலித கோஹன்ன கூறியுள்ளார்.

அட! நாசமறுப்பு. ரம்புக்வெல ஒரு கதை. சமாதானச் செயலகப் பணிப்பாளர் பாலித இன்னொரு கதை, சித்தம் கலங்கி செய்வதறியாது பேசுகின்ற ஒவ்வொரு பேச்சும் நாட்டையும் மக்களையும் அல்லவா குழப்பும்?

பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் முதலில் பொறுமை காக்க வேண்டும். துள்ளிக் குதிப்பதும் உணர்ச்சி வசப்படுவதும் கோபப்படுவதும் பெரும் அழிவுகளையே தரும்.

பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளராக இருக்கும் அமைச்சர் ரம்புக்வெல கூறுகின்ற ஒவ்வொரு வார்த்தையும் சமாதானத்தை குழப்புவதாகவே இருக்கின்றது.

பேச்சாளர் பதவி பொறுப்பானது. அதில் இருக்கிறவர்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தைகளையும் மக்கள் உற்று அவதானிப்பர். எனவே அதற்குள் இனவாதம், குதர்க்கம், பாகுபாடு போன்ற சொல்லாடல்கள் இருக்குமாயின் அது நாட்டின் ஒற்றுமை, இறைமை, சமாதானம் இவற்றிற்கு பெரும் பாதகமாகவே அமையும்.

எனவே அமைச்சர் ரம்புக்வெல தனது சொல்லாடலில் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். எனக்குத் தெரியும், என்னால் வெட்டிப் பேச முடியும் என்ற நினைப்பு ஒரு பகுதி மக்களைத் தாக்குவதாகவிருப்பதால் அது விடயத்தில் பல தடவைகள் சிந்தித்துத் தெளிவுறுவது அவசியமாகும்.

தற்போதைய தேவை சமாதானம். இங்கு நோர்வேயின் சமாதான அனுசரணையை ஜே.வி.பி. கடுமையாக எதிர்க்கின்றது.

இந்நிலையில் நிபந்தனையற்ற பேச்சுக்கு அரசு தயாரில்லை. நோர்வேயின் தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் கூறியதற்கு அரசு கண்டனம் தெரிவிக்கிறது. இவ்வாறு கூறுவதன் மூலம் ஜே.வி.பியை உசார் அடையச் செய்வதாகவே இருக்கும்.

இது நாட்டின் சமாதான எல்லையை எட்ட நகர்த்திவிடும். எனவே அமைச்சர் ரம்புக்வெல தனது பேச்சுத்திறனை சமாதான விடயத்தில் காட்டாமல் இருப்பதே நன்று.

அதேநேரம் பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் பொறுப்புடன் நடந்து கொள்கிறார்களா என்பதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்பார்வை செய்து கொள்ள வேண்டும்.

அநுராவின் உரைக்காக இந்தியத் தூதுவர் நிருபமாராவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வருத்தம் தெரிவித்த ஜனாதிபதி மகிந்த. அமைச்சர் ரம்புக்வெலவின் கூற்றுக்காக எரிக்சொல்லிடம் மன்னிப்புக் கேட்பது நல்லதல்லவா?

# பாரிய உணவு நெருக்கடியில் பல்கலைக்கழக மாணவர்கள்

## அவர்களே வலம்புரிக்குத் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்கள் பாரிய உணவு நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்கள் அரச அதிபராலும் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் வழங்கப்பட்டு வருகின்றது. மரக்கறி வகைகள் ஒன்று விட்ட தொரு தினத்தில் சேவாலங்கா நிறுவனத்தால் வழங்கப்படுகிறது.

தற்போது கையிருப்பிலுள்ள உலர் உணவுப் பொருட்கள் ஐந்து நாட்களுக்கு மாத்திரமே போதுமானதாகவுள்ளது என்றும் மாணவர்கள் வலம்புரிக்குத் தெரிவித்தனர்.

தறபோது பல்கலைக்கழக விடுதியில் சுமார் 400 மாணவர்கள் தங்கியுள்ளனர். வெளியிடங்களில் 800க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கியுள்ளனர். வெளியில் தங்கியுள்ள மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் பல்கலைக்கழக நிர்வாகம் ஆயிரம் ரூபா பணமும் 2 கிலோ அரிசி, ஒருகிலோ மா, ஒரு கிலோ பருப்பு, அரைக்கிலோ சீனி மாத்திரம் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பெற்றோர்களுடனும் உறவின்ர்களுடனும் தொடர்பு கொள்ள தொலைத்தொடர்பு வசதி செய்து தருமாறு அரச அதிபருக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அவர் சாதகமாக பதிலளித்த போதிலும் இதுவரை அவ்வசதி செய்து தரப்படவில்லை.

இதனால் யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கும் வெளிமாவட்ட மாணவர்கள் உறவினர்களுடன் தொடர்பு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை தமது பிரயாண ஒழுங்கு பற்றி அரச அதிபருடன் பேசியபோது அவர் விரைவில் ஏற்பாடு செய்வதாக தெரிவித்தார். எனினும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அது குறித்து சிவில் அலுவலகத்தில் விசாரித்தபோது தமது பெயர்ப்பட்டியல் அங்கு அனுப்பப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டதாகவும் தமக்கான பயண ஒழுங்குகள் விரைவில் செய்து தரப்பட வேண்டும் என்றும் அம் மாணவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். (ச-133)

# சமாதானப் பேச்சுக்களை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள்

## பிரிட்டிஷ் தூதுவர் வலியுறுத்தல்

(கொழும்பு)

ஒஸ்லோவில் அடுத்த மாதம் பேச்சு நடத்த அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இணங்கியுள்ளதாக இணைத்தலைமை நாடுகள் தெரிவித்திருப்பதும் அதற்கு அரசாங்கத்தில் பேச்சாளர் அளித்துள்ள பதிலும் குழப்பமாக இருப்பதாக இலங்கைக்கான பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் டொமினிக் சில்கொட் தெரிவித்துள்ளார்.

நிபந்தனைகள் எதனையும் விதிக்காமல் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான வாய்ப்பை இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். நிலக்கண்ணி கண்காணிப்பு அறிக்கை 2006 இனை வெளியிடும் நிகழ்வு கொழும்பு இலங்கை வெளிவிவகார உறவுகளுக்கான நிறுவகத்தில் இடம்பெற்ற வேளை அதில் கலந்து கொண்டு உரையாற்றிய டொமினிக் சில்கொட் இதனைத் தெரிவித்தார்.

மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய உயர்ஸ்தானிகர், இணைத்தலைமை நாடுகளின் அறிக்கையை தமது நாடு முழுமையாக ஆதரிப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மனிதாபிமான நெருக்கடிகள் குறித்துத் தெரிவிக்கப்படும் கவலைகள் உண்மையானவையாகவுள்ளன எனக் குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது;

இணைத்தலைமைநாடுகள் தெரிவித்துள்ள விடயங்களும் இலங்கை அரசாங்கத்தில் இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்ட கருத்துக்களும் புதிதானவையானதாகவுள்ளன. தேவையற்ற நிபந்தனைகளை விதிக்காமல் தாமதிக்காமல் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தைஇறுகப் பற்றிக் கொள்ளுங்கள். இராணுவத்தினரின் கை ஓங்கியிருப்பது போலவும் அவர்களால் பல வெற்றிகளைப் பெற முடியும் என்பது போலவும் தற்போது தோன்றலாம்.

எனினும் இதன் மூலம் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை காண்பதற்கான சந்தர்ப்பம் உள்ளது எனக் கருதுவது பாரிய தவறாக அமையும். பிரிட்டனுக்கு இந்த விடயத்தில் சிறந்த அனுபவங்கள் உள்ளன.

அரசாங்கம் அனைத்துக் கட்சிகள் சந்திப்புக்கள் மூலம் புதிய அரசியல் முயற்சிகளை மேற்கொள்கின்றது. இது வரவேற்கத்தக்கது. தமிழ்-முஸ்லிம் சமூகத்தினர் உட்பட அனைவருக்கும் நம்பிக்கையூட்டும் செயற்பாடுகள் அவசியம்.

சமூகங்களிடையே நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவது வெற்றிகரமான சமாதான முயற்சிகளுக்கு மிகவும் அவசியமான ஒரு விடயம். அனைத்து சமூகங்களும் தாங்கள் நன்மையடைந்துள்ளதாக கருதுவது அவசியம் எனக் கூறினார். (ச-5)

# சென்னையில் மீட்கப்பட்ட லோஞ்சர்கள் விடுதலைப்புலிகளுக்கு அனுப்பப்படவில்லை

## சென்னைப் பொலிஸார் தெரிவிப்பு

ஆந்திராவுக்குக் கடத்தப்படவிருந்தபோது அண்மையில் சென்னையில் வைத்துக் கைப்பற்றப்பட்ட ரொக்கெட் லோஞ்சர்கள் சென்னையில் தயாரிக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் தமக்குக் கிடைத்துள்ளதாக ஆந்திர மாநில பொலிஸ் மா அதிபர் இஸ்வரன்ஜித் சென் தெரிவித்துள்ளார்.

அந்த ஆதாரங்களை இப்போது வெளியிட முடியாது என்றும் எனினும் இவை விடுதலைப்புலிகளுக்குக் கடத்தப்படவில்லை என்றும் ஆந்திராவிலுள்ள நக்சலைட்டுக்களுக்கே கடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனித்தனிப் பாகங்களாகப் பிரிக்கப்பட்டு கோணிப்பைகளில் அனுப்பப்பட்ட இந்த ரொக்கெட் லோஞ்சர்கள் ஆந்திரா மாநிலத்திலுள்ள கிராந்தி டிரான்ஸ்போர்ட் குடோனில் தேங்கிக் கிடந்த நிலையில் மேற்படி நிறுவனத்தினரால் ஏலம் விடப்பட்டபோது இக் கோணிப்பைகளை நான்கு பேர் ஏலத்தில் எடுத்துள்ளனர்.

இந்நிலையில் அவை கொண்டு செல்லப்பட்ட வானை ஆந்திர வனப் பகுதியில் வைத்துப் பொலிஸார் மடக்கிப் பிடித்தபோதே இந்த ரொக்கெட் லோஞ்சர்கள் மீட்கப்பட்டன.

விடுதலைப்புலிகளுக்கு அவை கடத்தப்படவில்லை. கடலோர மாநிலத்தில் பாதுகாப்பு விஜயங்கள் குறித்து தமிழக பொலிஸ் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினேன். விரைவில் ரொக்கெட் லோஞ்சர்கள் கடத்தல் சம்பவத்தின் பின்னணியில் இருந்து செயற்பட்டவர்களைக் விரைவில் கைது செய்வோம் என அவர் தெரிவித்தார். (ச-5)

# தமிழர்கள் கடத்தப்படுவதைக் கண்டித்து கொழும்பில் சாத்வீகப் போராட்டம்

(கொழும்பு)

கொழும்பில் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு எதிரான ஆட்கடத்தல்களுக்கும் படுகொலைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்குமுகமாக கடையடைப்புடன் கூடிய சாத்வீகப் போராட்டம் நடத்துவதற்கு மேலக மக்கள் முன்னணி தீர்மானித்திருப்பதாக தலைவர் மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் மனோ கணேசன் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது;

தலைநகரில் தொடர்ச்சியாக தமிழ் மக்களுக்கும் குறிப்பாக தமிழ் ஊடகத் துறையினருக்கும் வர்த்தகத் துறையினருக்கும் எதிராக நடத்தப்பட்டுள்ள ஆட்கடத்தல்கள் அரசாங்கத்தினதும் காவல்துறையினரதும் கவனங்களுக்கும் ஏற்கனவே கொண்டு வரப்பட்டுள்ளன.

இவ்விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்திலும் குறிப்பாக அவசரகால சட்ட விவாதத்தின்போதும் ஆணித்தரமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இதைவிடவும் மேலதிகமாக சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு தலைநகர சம்பவங்களைக் கொண்டு வரும் நோக்கில் நோர்வே மற்றும் இந்திய அரசாங்களின் கவனங்களுக்கும் நாம் (04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரைமணி நேரத்தில் மூவரை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு செபஸ்தியார் வீதியில் கடந்த 11 ஆம் திகதி காலை 7மணி தொடக்கம் 7.30 மணிக்குமிடையில் 3 இளைஞர்களை காணவில்லை என யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த நேரத்தில் அதே முகவரியைச் சேர்ந்த தங்கரூபன் ஜீவா (வயது 23) என்ற இளைஞன் கடைக்குச் சென்றதாகவும் தேவராசா நிதர்சன் (வயது 17) என்ற இளைஞன் மேசன் வேலைக்குச் சென்றதாகவும் தம்பிஜயா ரகீம் (வயது 17) என்பவர் பாண் வாங்கச் சென்றதாகவும் இவர்கள் மூவரும் இதுவரை வீடு திரும்பாத நிலையில் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (ச-5)



வவுனியாவில் மதகுவைத்த குளத்தில் மீட்கப்பட்ட இளைஞர்களின் சடலத்தையே படத்தில் காண்கிறீர்கள்.

## மணிக்கும்பானில்...

இதேவேளை சூட்டுக்காயங்களுடன் காணப்பட்ட சடலங்களின் உறவினர்கள், யாழ். மாவட்ட நீதிவானும் ஊர்காவற்றுறை பதில் நீதிவானுமாகிய இ.த.விக்னராஜாவுடன் தொடர்பு கொண்டனர்.

இதனையடுத்து உறவினர்களுடன் சென்று சடலத்தை அடையாளம் காணுமாறு நீதிவான் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

எனினும் நேற்று மாலை வரை பொலிஸார் நீதிவானுடன் எந்தவித தொடர்பையும் ஏற்படுத்தவில்லையென தெரிவிக்கப்பட்டது. இரண்டு சடலங்களும் இன்று நீதிவான் முன்னிலையில் மீட்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (ச-5)

## மூன்று சிங்கள...

இவர்கள் மூவரும் அநுராதபுரம், கண்டி மற்றும் அம்பாறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.இதேவேளை வவுனியா குருமன்காடு கோயில் வீதியில் நேற்றிரவு ஐ.நா.வின் அகதிகளுக்கான ஆணையர் அலுவலகத்திற்கு அருகில் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. எனினும் சடலம் அடையாளம் காணப்படவில்லை. (ச)

## இரவு நேர...

சிக்கல் ஏற்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.கடந்த சில நாட்களாக இரவு 7 மணி முதல் இரவு 11 மணி வரை மின்சாரம் வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# தியாக தீபம் திலீபனின் 19-ம் ஆண்டு நினைவு தினம்

தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் 19-ம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் தமிழர் தாயகத்தில் இன்று ஆரம்பமாகின்றது.இந்திய அரசிடம் நீதிகோரி 1987 செப் ரெம்பர் 15 ஆம் திகதி முதல் 12 நாட்கள் உண்ணாவிரதமிருந்து தனது கோரிக்கைகள் நிறைவேறாத நிலையில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இதேவேளை வெளிநாடுகளிலும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்க ஏற்பாடாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச)

## எந்த சூழ்நிலையிலிருந்தாலும்...

ஆலோசித்திருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறான குறைபாடுகள் அறிக்கையில் இருந்தாலும் அதனை ஒரு காரணமாகக் கொண்டு அரசு பேச்சிலிருந்து விலகிக் கொள்ளாது. எத்தகைய குறைபாடுகள் இருந்தாலும் விடுதலைப்புலிகளுடன் தொடர்ந்து பேச்சுக்களை நடத்த விருப்பதாக சொல் ஹெய்மிடம் கூறியிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கமும் போர்நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக மீண்டும் கடைப்பிடிக்கும் பட்சத்திலேயே பேச்சுவார்த்தைகள் சாத்தியமாகுமென விடுதலைப்புலிகள் கூறியுள்ளனரே என கேட்டபோது;

விடுதலைப்புலிகள் எந்தவித நிபந்தனைகளுமின்றி பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருக்கின்றபோது அவர்கள் எந்தவிதமான நிபந்தனைகளையும் விதிக்கமுடியாது என்றார்.

ஏனெனில் இணைத்தலைமை நாடுகள் மற்றும் மத்தியஸ்தர்கள் குறிப்பிட்ட கருத்துக்குமாறாக தமிழ்ச்செல்வன் கூறினால் அது நியாயமானதல்ல.எனவே அந்நிலைப்பாடு குறித்து நாம் தெளிவுபடுத்தவிருக்கிறோம் என்றார் அவர். (ச)

## அல்வாய்...

இவர் வேலைக்காக வீட்டிலிருந்து புறப்பட்டுச்சென்ற வேளை அல்வாய் மாலுசந்தி வீதியில்வைத்து இனந்தெரியாதோரால் சுடப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை நீதிவான் அரியநாயகம் மரண விசாரணைக்காக சடலத்தை பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ச-52,101,133)

## கூட்டமைப்பு...

எம்.கே.சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,பத்மினி- சிதம்பரநாதன் .ஆகியோர் இன்று புதுடில்லிக்கு செல்லவுள்ளனர்.

புதுடில்லியில் உள்ள பிரதமர் மன்மோகன் சிங்கின் உத்தியோகபூர்வ இல்லத்திலேயே இச் சந்திப்பு நடைபெறவுள்ளது. அதே வேளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.கருணாநிதியை கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அல்லது புதன்கிழமை சந்திக்கவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இச் சந்திப்புக்களில் கலந்துகொள்வதற்காக கொழும்பில் தற்போது இருக்கும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன் புதுடில்லி செல்லவுள்ளார். (ச)

## ஈ.பி.டி.பி....

ததாக தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர் பிரான்ஸிஸ் ஜெகநாதன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர்கள் மீது விடுதலைப்புலிகளின் பிஸ்ரல் குழுவினரே துப்பாக்கித் தாக்குதல் நடத்தியதாக ஈ.பி.டி.பி.குற்றஞ்சாட்டியுள்ளது.

இதேவேளை துப்பாக்கிச் சூடு நடைபெற்ற கடையின் உரிமையாளரும் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ச)

## விடுதலைப்...

ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை வவுனியா மதவாச்சிக் குளம் இராணுவ பொலிஸ் காவலரண் மீது விடுதலைப்புலிகளினால் புதனிரவு கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தேசிய பாதுகாப்பு தகவல் மையம் தெரிவித்துள்ளது. (ச)

## தமிழர்கள் கடத்தப்படுவதை...

கொண்டுவந்துள்ளோம்.இது தொடர்பில் நானும் ஐ.தே.க. தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸாநாயக்க. கூட்டமைப்பு எம். பிக்களான ரவிராஜ், சுரேஷ் பிரேமச்சந்திரன் , ஐக்கிய சமத்துவ கட்சியின் சிறிதுங்க ஜயசூரிய ஆகியோர் அடங்கிய குழுவினர் பல்வேறு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளோம்.

இதுவரையில் கொழும்பிலும் புறநகர் பகுதிகளிலும் கடத்தப்பட்டுள்ள , படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவங்களின் விபரப்பட்டியல் தற்போது சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவி தமிழ் மக்களின் மனவுணர்வுகளை நேரடியாக சர்வதேச மற்றும் தேசிய கவனங்களுக்கு கொண்டுவர வேண்டிய கடமை எமக்கு ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே எமது மக்கள் தொடர்பில் அக்கறை கொண்டுள்ள சிங்கள முற்போக்கு சக்திகளுடனும் ஏனைய தமிழ், முஸ்லிம் கட்சிகளுடனும்இணைந்து தலைநகரில் பாரிய கடையடைப்புடன் கூடிய சாத்வீக போராட்டத்தை நடத்துவதற்கு மேலக மக்கள் முன்னணி தயாராகின்றது.

இது தொடர்பில் ஏனைய அரசியல் சமூக வர்த்தக அமைப்புக்களுடன் கலந்தாலோசிப்பதற்கான பொறுப்பை நாம் தட்டிக்கழிக்க விரும்பவில்லை.

இத்தகைய கலந்தாலோசனைகளை நடத்தி இன்னமும் இரண்டொரு தினங்களில் எமது அடுத்த கட்ட நடவடிக்கை பற்றிய அறிவிப்பை மேலக மக்கள் முன்னணி வெளியிடும் என தெரியவருகிறது. (ச)

## பயணிகளுடன்...

இதேவேளை இது போன்று பயணிகள் கப்பல்களை மேலும் அனுப்ப தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## யுத்த நிறுத்தத்தை...

இது குறித்து தமிழ் நெற் இணையத்தளத்திற்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளதாவது,

இவ் வருடம் பெப்ரவரியில் ஜெனீவாவில் அரசு இணங்கிய இராணுவ இணக்கப்பாடுகளை உறுதி செய்வது அவசியம் என்று இணைத்தலைமை நாடுகள் கோரியுள்ளமை வரவேற்கத்தக்கது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி வலிந்த தாக்குதல்களை முன்னெடுத்ததுடன் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது.

ஆகவே யுத்தநிறுத்த சரத்துக்களில் இணக்கப்பாடு காணப்பட்டதற்கு இணங்க இரு தரப்பின் எல்லைகளை மீளவும் அதே நிலைக்கு நகர்த்தி சமாதானப் பேச்சுக்களை சுமுகமாக முன்னெடுக்க மகிந்த ராஜபக்ஷ அரசு முன்னெடுப்புக்களை மேற்கொள்ளும் என்று நம்புகின்றோம்.

விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு பற்றி செப்ரெம்பர் 6 ஆம் திகதி நோர்வேத் தூதுவர் ஹான் பிறட்ஸ்கர் தலைமையிலான நோர்வே தூதுக்குழுவினருக்கு தெளிவான விளக்கம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. அதையே நாம் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கும் தெரிவித்தோம்.

அமைதி முயற்சிகளை மேற்கொள்வதற்கு ஏதுவான சூழலை அரசு உருவாக்குவதை சர்வதேச சமூகமும் அதற்கு அனுசரணை வழங்கும் நோர்வே தரப்பும் உறுதி செய்வது அவசியம் என்றும் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டு மக்களுக்கான உணவு விநியோக சிக்கல்கள் தொடர்பான கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு இது குறித்து முழுமையான பதில் வழங்கப்பட்டுள்ளதாகவும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்படி இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ள பிரதேசங்களின் ஊடாக உணவு விநியோகத்தை மேற்கொள்ள விடுதலைப்புலிகள் முழுமையான ஒத்துழைப்பையும் பாதுகாப்பையும் வழங்க உறுதி அளித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இருப்பினும் இராணுவ ஆக்கிரமிப்பையும் தாக்குதல்களையும் முன்னெடுத்து வரும் அரசு விநியோகப் பாதைகளை திறப்பதற்கும் மறுத்து வருவதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கை தவிர ஆட்கடத்தல்கள், திட்டமிட்ட கொலைகள் மற்றும் குற்றச்செயல்களையும் இராணுவம் பல மடங்கு அதிகரித்துள்ளது.

புதிய கண்காணிப்புக்குழுத் தலைவருடனான சந்திப்பின்போது இந்த யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் தொடர்பாக ஆராயப்படும் என்றார் அவர்.

தற்போதைய கள நிலைவரத்தை புரிந்து கொண்டு சரியான நிலைப்பாட்டை எடுத்துள்ள சர்வதேச சமூகத்தைப் பாராட்டிய தமிழ்ச்செல்வன் முல்லைத்தீவில் 51 பாடசாலைச் சிறுமிகள் மற்றும் நான்கு உத்தியோகஸ்தர்கள் மீதான விமானப்படையின் தாக்குதல்களையும் கண்டித்தமையையும் அவர் வரவேற்றுள்ளார். (ச-5)


யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

**பாண் விலை மாற்றம்**

450 கிராம் நிறை கொண்ட ஒரு றாத்தல் பாணின் ஆகக்கூடிய சில்லறை விலை 15.09.2006-இல் இருந்து ரூபா 30/ (முப்பது) ஆகும்.

முக்கிய குறிப்பு:- இதனைவிட கூடிய விலையில் விற்கும் விற்பனையாளர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

(அரச அதிபரின் அறிவுறுத்தலுக்கு இணங்க)

-நிர்வாகம்

(C-445)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.09.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org